Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 424/2019**

**Deposition of PW.5 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுசீந்திரன் | ஜாதி | : | |
| த/பெ | : | பழனிச்சாமி | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | தருமத்துப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 50 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்படுகிறது)

**முதல் விசாரணை**

நான் தருமத்துப்பட்டியில் குடியிந்துகொண்டு டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 15 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 05.00 மணியளவில் நான் தருமத்துப்பட்டியில் இருந்து ஆடலூர், பன்றிமலைக்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, வாகன விபத்தில் காயம்பட்ட கோவிந்தராஜும், வாகன விபத்தில் இறந்துபோன இளம்பரிதியும் Yamaha இருசக்கர வாகனத்தில் பன்றிமலையிலிருந்து கீழே இறங்கி பன்றிமலை, அழகுமடை அருகே வந்துகொண்டிருந்தபோது, அப்போது அவருக்கு எதிரே பிக்கப் நான்கு சக்கர வாகனம் கீழிலிருந்து மேல்நோக்கி வந்தபோது அழகுமடை பக்கத்தில் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் மீது மோதி வாகன விபத்தை ஏற்படுத்தினார். அப்போது நான் வாகன விபத்தை பார்த்துவிட்டு சம்பவ இடம் சென்று பார்த்தபோது இளம்பரிதிக்கு தலையின் பின்பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. கோவிந்தராஜுக்கு கையில் காயம் ஏற்பட்டிருந்தது. இளம்பரிதி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இறந்த இளம்பரிதியை தூக்கி நான் பார்த்துக்கொண்டிருந்தபோது அவர்களை அடித்த பிக்கப் நான்கு சக்கரத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் மலைக்கு கீழே வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டி சென்றுவிட்டார். அதனால் நான் அந்த பிக்கப் வாகனத்தை ஓட்டி வந்த

ஓட்டுநரை பார்க்கவில்லை. இறந்துபோன இளம்பரிதியை 108 ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். காயம் அடைந்த கோவிந்தராஜை இருசக்கர வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். பிக்கப் வாகனத்தின் ஓட்டுநரை நீங்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் மது அருந்தியிருந்தார்களா என்றால் இல்லை. இளம்பரிதி காரில் தான் சென்றார் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், நீங்கள் சம்பவத்தை பார்க்காமல் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor